## துறையூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : திரு.வே.இராமர், B.A., B.L.,

ந.க.எண்.3572/2023/எப்1 நாள். 29.02.2024.

| | |
|---|---|
| பொருள் | மனைப்பிரிவு – துறையூர் நகராட்சி – விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். –வார்டு B – பிளாக் எண்.16 – நகரளவு எண். 37, மற்றும் சர்வே எண்.233/7 அமைந்துள்ள 0.70 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – இறுதி ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக. |
| பார்வை | 1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் /துணை இயக்குநர் (மு.கூ.பொ), திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் 88XXE2C1/14665/2023/TCP நாள்.20.10.2023<br>2. மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தான சாசனப் பத்திர எண். 8397/2023.<br>3. தெருவிளக்குடன் கூடிய மின் கம்பத்திற்கு உரிய மதிப்பீட்டு தொகைரூ.12192/- ரசீதுஎண்.087/01/23-24/0013804, 087/01/23-24/0013805, நாள்.29.01.2023<br>4. திரும்ப பெற கூடிய வைப்புத் தொகை ரூ.1,00,000/- ரசீது எண். 087/01/23-24/0017654, நாள்.26.02.2024<br>5. அரசாணை (MS) எண். 141/ வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை ( UD4(1) ) துறை/ நாள். 16.07.2022<br>6. நகர் மன்றத் தீர்மான எண்.179/29.02.2024<br>7. அபிவிருத்திக் கட்டணம். 15225/- ரசீது எண்087/01/23-24/0012655, நாள்.26.02.2024<br>8. மனைப்பிரிவு ஒப்புதல் கட்டணம் 7500/- ரசீது 087/01/23-24/0012655, நாள்.26.02.2024 |

*****

**உத்தரவு :**

துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு B – பிளாக் எண்.16 – நகரளவு எண். 37, மற்றும் சர்வே எண்.233/7 அமைந்துள்ள 2850 ச.மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலைகள் பூங்கா இடம், பொது உபயோகம் இடம் மற்றும் மின் பகிர்மான இடத்திற்கான சாலை அமைப்பு வரைபடத்திற்கு ஒப்புதல் அளித்து பார்வை 2-ல் கண்டுள்ள தானப்பத்திரம் மூலம் நகராட்சிக்கு சாலைகள், பூங்கா ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி, மனைப்பிரிவிற்கு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.தி.மா எண். 132/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி எண்.147/2023 வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 1ல் கண்டுள்ள உத்தரவில் மேற்படி பார்வை 6ல் கண்டுள்ள நகர் மன்ற தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 3, 4, 7 மற்றும் 8ன்படி உரிய கட்டணங்கள் நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே, நகர் ஊரமைப்புத் துறையால் வழங்கப்பட்ட நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள், பூங்காவிற்கு வேலி அமைத்து சாலை மற்றும் பூங்காவினை உட்பிரிவு செய்தும் தங்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்கு மட்டும், மொத்த மனைகளின் எணிக்கையில் 60 விழுக்காடு அபிவிருத்தி அடையும் வரை அல்லது ஐந்து வருட காலத்திற்கு தாங்களே பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளோடு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்து இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

29/2/24

ஆணையாளர்(மு.பொ)
துறையூர் நகராட்சி

<u>இணைப்பு</u> :

1. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் 29/2/24
2. நகர் ஊரமைப்புத் துறையால் வழங்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

<u>பெறுநர்</u>

திரு.கே.மணிகண்டன் & எம்.கார்த்திகேயன்,
114–எஸ்.ஆர்.எஸ்.நகர்,
தியாகி சிங்கார வேலர் தெரு,
துறையூர்.

<u>நகல்</u>:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. சார்பதிவாளர், துறையூர்.
3. நகராட்சி பொறியாளர், மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகளை, சாலைப் பதிவேடு மற்றும் UTIS மென் பொருளில் பதிவு செய்திட
4. வருவாய் ஆய்வர், காலிமனை வரி நிர்ணயம் பணி மேற்கொள்ளும் பொருட்டு